ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் குண்டடிப்பட்ட

மாற்றுத்திறனாளிக்கு போதைக் கும்பல் கொலை மிரட்டல்!

காவல்துறையினர் உடனே நடவடிக்கை எடுக்க கழக துணைப் பொதுச் செயலாளர்

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை,நவ.12-

ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் காலில் குண்டடிப்பட்ட மாற்றுத்திறனாளி ஒருவருக்கு போதைக் கும்பல் கொலை மிரட்டல் விடுவதால், காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூகவலைதளப் பதிவு வருமாறு:

தூத்துக்குடியில் பிரின்ஸ்டன் என்பவர் தனது மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் பயணித்தபோது, அவரது வாகனத்தின் மீது மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்து மோதிய போதைக் கும்பலால் கொலைவெறித் தாக்குதலுக்கு உள்ளாகி, மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

காவல்துறையிடம் புகார் அளித்தால் கொன்றுவிடுவதாகக் குடும்பத்தினரை அந்தக் கும்பல் மிரட்டியதாகவும் பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.


ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் காலில் குண்டடிபட்டு, செயற்கைக் கால் பொருத்தப்பட்ட மாற்றுத்திறனாளியான பிரின்ஸ்டனுக்கு நேர்ந்த இக்கொடுமைக்கு யார் பொறுப்பு? தவெக ஆட்சியில் சாமானியர்கள் சாலையில் செல்ல முடியாத அளவுக்குப் போதைக்கும்பல்களின் அட்டூழியங்கள் அதிகரித்துவிட்டன.



பாதிக்கப்பட்டவர் அளித்திருக்கும் புகாரின் மீது உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரின்ஸ்டனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; ‘கடந்த ஆட்சியில்’ எல்லா துறைகளிலும் ஊழல் மலிந்து தலை விரித்தாடியிருந்ததுன்னு ஒருத்தர் பேசி இருக்காரே! தெரியுமா?

போண்டி : ஆமாய்யா; அந்த ஆட்சியிலேதான் தம் பையனுக்கு திருச்சி தொகுதியில் எம்.பி. சீட் வேணும்ன்னு கேட்டு அடம்பிடிச்சி வாங்கியபோது அந்த ‘யோக்ய சிகாமணிக்கு’ ஊழல் பத்தி தெரியலியா? சரியான காரியவாதியா அவர்.

கம்பம் நா.இராமகிருஷ்ணன் தலைமை! கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

கம்பம் இரா.பாண்டியன் - அம்பிகா இல்லத் திருமண விழா!

இ.பெரியசாமி – ஓ.பன்னீர்செல்வம் – முன்னணியினர் வாழ்த்துரை!

கம்பம், நவ.12-

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கம்பம் இரா. பாண்டியன் - அம்பிகா ஆகியோரின் சகோதரர் இரா.ஜெயராஜ் - பூமணி ஆகியோரின் புதல்வர் ஜெ.ராஜேஷ்குமாருக்கும், அ ர ண் ம னை ப் பு தூ ர் பி.கெஜேந்திரன் - அன்னக்கிளி ஆகியோரின் புதல்வி ஜி.அனுபிரிதாவுக்கும் மண விழா நாளை (13.11.2026 - வெள்ளிக்கிழமை) காலை 9.15 மணியளவில் கம்பம் யாதவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இ ம் ம ண வி ழ் வி ற் கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

இம்மண விழாவினை கழக துணைப்பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் பங்கேற்று மண மக்களை வாழ்த்துகிறார்.

மணவிழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி மற்றும் பெ.செல்வேந்திரன், எல்.மூக்கையா, ஆ.மகாராஜன் எம்.எல்.ஏ., ஓ.பி.ரவீந்திரநாத், எஸ்.பி.எம். சையது கான், ஓ.ஆர்.நாராயணன், குமரேசன், ஆர்.இராஜாங்கம், என்.ஜெயராஜ், செல்வி



ஏ.ஜெகதீஷ், கீதா, ஜி.பி.ராஜா, எம்.ஜெயக்குமார், பெ.ஆசையன், எஸ்.லட்சுமணன், கே.எஸ்.சரவணக்குமார், மதுரை மா.ஒச்சுபாலு, மதுரை ஜெயராமன், மூவேந்திரன், தேன்மொழி கோபிநாதன், வனிதா நெப்போலியன், காந்திமதி ராஜேந்திரன், எம்.ஆர்.சீனிவாசன், கே.சத்தியமூர்த்தி, த.மனோகரன், பி.டி.செல்லப்பாண்டியன், குருகுமரன், பி.முருகேசன், எம்.சங்கர், தங்கபாண்டியன், தே.சி.இ. ஜெயசந்திரன், ஆர்.தினகரன், சாந்தா, கே.சிங்கராஜ், எல்.ரவிச்சந்திரன், இளங்கோவன், மு.இராம மூர்த்தி, ரெக்ஸ், எம்.என்.காளிமுத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.இ.வீரபாண்டியன், சி.பால்பாண்டிராஜன் வரவேற்கின்றனர்.

இ ம் ம ண வி ழ் வி ல் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, ஊராட்சி மன்ற, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல்:

லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிய உத்தரவிட வேண்டும்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சட்டப்பிரிவு இணைச் செயலாளர் இ.பரந்தாமன் மனு!

சென்னை, நவ. 12-

கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல் முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக் கோரி தி.மு.க. சட்டப் பிரிவு இணைச் செயலாளர் பரந்தாமன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தி.மு.க. சட்டப்பிரிவு இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சார்பில் வழக்கறிஞர் தாமோதரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், கோவை பெரியார் அறிவுலகத்துக்கு 50 கோடி ரூபாய் புத்தகங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த பெரியார் அறிவுலகம் கடந்த அக்டோபர் 16ம் தேதி துவக்கி வைக்கப்பட்டது. புத்தகங்கள் பரிந்துரைக்காக 117 பேர் அடங்கிய புத்தக பரிந்துரைக் குழு



அமைத்து கடந்த 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் உத்தரவிடப்பட்டது. அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகங்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் ஏஜென்சி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

மோனிகா ரவி என்ற ஒரே எழுத்தாளரிடம் இருந்து 6 மாதங்களில் 162 புத்தகங்களும், லட்சுமி மோகன், தாமரை பன்னீர், தாமரை முரளி, ஜோதி ஹரிஹரன் ஆகிய எழுத்தாளர்களின் நூற்றுக்கணக்கானப் புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த பெயரில் எழுத்தாளர்கள் இருக்கின்றனரா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்தப் புத்தகங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

புத்தக பரிந்துரைக் குழுவில் உறுப்பினராக இருந்த பெருமாள் முருகன், அகல் விளக்கு பதிப்பகத்தில் இருந்து 1800 புத்தகங்கள் பெரியார் அறிவுலகத்துக்கு வாங்கப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தினார். பல் வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், இந்த புத்தக கொள்முதல் ஊழல் குறித்து கண்டனங்களைப் பதிவு செய்தனர்.

இந்த புத்தக கொள் முதலில், பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என கடந்த 7ம் தேதி நான் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் அளித்தேன். ஆனால், இதுவரை எந்தவொரு குற்ற வழக்கும் பதிவு செய்யப் படவில்லை. அரசு நியமித்துள்ள நிர்வாக ரீதியிலான விசாரணைக் குழு போது மானதாக இல்லை. எந்த வொரு விசாரணையும் நடத்தாமல் முந்தைய அரசு மீது குற்றம்சாட்டுவதால் இந்த விவகாரத்தில் பார பட்சமற்ற விசாரணை நடத் தப்பட வேண்டும்.

பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல் தொடர்பான கோப்புகளை பறிமுதல் செய்து பத்திரப்படுத்த லஞ்ச ஒழிப் புத்துறைக்கு உத்தரவிட வேண்டும். எனது புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

த.வெ.க. எம்.எல்.ஏ.வின் அநாகரிகப் போக்கு:

மதுபோதையில் பெண் கலெக்டர் இல்லத்திற்கே சென்று அச்சுறுத்துவதா?

கழக மகளிர் அணி கண்டனம்!

சென்னை, நவ. 12-

மாவட்ட பெண் ஆட்சியருக்கே பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கும் த.வெ.க. எம்.எல்.ஏ.வின் அநாகரிகப் போக்கிற்குத் தி.மு.க. மகளிரணி சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) சட்டமன்ற உறுப்பினர் சி.அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்திகளை அனுப்பியதோடு, மதுபோதையில் அவரது இல்லத்திற்கே சென்று அச்சுறுத்தும் வகையில் தொந்தரவு செய்ததாக வெளிவந்துள்ள செய்திகள் ஒட்டு மொத்த தமிழகத்தையும் பேரதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது.

பெண்ணுரிமைக்கும், பெண்களின் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளிக்கும் தமிழ் மண்ணில், ஒரு மாவட்டத்தின் மிக உயரிய பொறுப்பில் இருக்கும் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கே இந்த நிலை என்றால், சாதாரண எளிய பெண்களின் பாதுகாப்பு எத்தகைய கேள்விக்குறியாகும் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் அஞ்சுகிறது. மக்கள் பிரதிநிதி என்ற பொறுப்பை மறந்து, சட்டம் ஒழுங்கைத் தன் கையில் எடுத்துக்கொண்டு ஒரு பெண்ணின் மாண்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட த.வெ.க. எம்.எல்.ஏ.வின் இந்த அநாகரிகப் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்திய வரலாற்றிலேயே இல்லாத வகையில், மாவட்ட நிர்வாகத்தை முன்னின்று நடத்தும் பெண் ஆட்சியருக்கே அச்சுறுத்தல் தரும் வகையில் அரங்கேறியுள்ள இந்தச் சம்பவம், தமிழ்நாட்டிற்கு நேர்ந்திருக்கும் பெரும் தலைகுனிவாகும்.

காவல்துறை இந்த விவகாரத்தில் சற்றும் தாமதிக்காமல், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டும் வகையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மீது மிகக் கடுமையான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் என்று ஹெலன் டேவிட்சன், (மாநில மகளிர் அணிச் செயலாளர், நாமக்கல் ப.இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

விருதுநகர் மாவட்டம்:

பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் இல்லத் திருமண விழா!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வாழ்த்து!

விருதுநகர், நவ. 12-

விருதுநகர் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் - பாண்டியம்மாள் தம்பதியரின் மகனான R.P.M.சூரியா என்பவருக்கும், ராமமூர்த்தி கலைச்செல்வி தம்பதியரின் மகளான ரா.ஹேமலதா என்பவருக்கும் வருகின்ற 15.11.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7 மணி முதல் 8.30 மணிக்குள் விருதுநகர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக் கோயிலில் திருமணமும் இதர வைபவங்கள் கற்கு வேல் அய்யனார் திருமண மண்டபத்தில் நடைபெற



உள்ளது. இத்திருமண விழாவிற்கு தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்கம் தென்னரசு பங்கேற்று மண மக்களை வாழ்த்த உள்ளனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், The Groups of Companies, Dubai சந்திரமாரி முரளிகுமார், சுரேஷ்பாபு ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத்திருமண விழாவிற்கு முன்னாள் சேர்மன் K.K.S.V.T.சுப்பாராஜ், தி.மு.க. நகர செயலாளர் S.R.S.தனபாலன், விருதுநகர் நகர்மன்ற தலைவர் S.R.S.R. மாதவன், மாவட்ட அணி அமைப்பாளர் K.G.ராஜகுரு, முன்னாள் சேர்மன் ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர் R.சுதாகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் R.கிருஷ்ணகுமார், வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் என்ற ஜெயச்சந்திரன், PRC பொதுச்செயலாளர்: ராஜா செல்வம், வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் (எ) ஜெயசந்திரன், PRC பொதுச் செயலாளர் ராஜ் செல்வம், இளைஞர் அணி துணை அமைப்பாளர் P.ஜெகன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் மித்ரு நாகேந்திரன், நகர இளைஞர் அணி நிர்வாகிகள் முகமது பாசில், R.அஜய் குமார், N.முத்துக்குமார், சக்தி விக்னேஷ், இஸ்ரவேல், ஆசிப், சதீஷ் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மாநகர, நகர, ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முத்துமணிகண்டன் – ஆர்த்தி ஆகியோர் திருமணத்தை தி.மு.கழக தலைமை நிலையசெயலாளர் பூச்சி முருகன் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். உடன் முன்னாள் அரசு வழகறிஞர் கார்த்திகேயன், சேர்மன் முக்தார், ராஜாராம் மற்றும் பழங்காநத்தம் பகுதிச் செயலாளர் சுதன், பெருநாழி சசிகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள கழகத்தைச் சேர்ந்த மேட்டூரில் உள்ள சி.பாப்பையா சாலையில் பையில் இருந்த சுமார் ரூபாய் 35 லட்சம் மதிப்பிலான தங்க நகைகளும் ரூபாய் 5000 ரொக்கப் பணமும் இருப்பதை அறிந்து பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் கழகப் பற்றாளர் பாப்பையா அவர்களை நேரில் சந்தித்து பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்து அவருக்கு கழக இரு வண்ண வேட்டி, சட்டை, பழங்கள் மற்றும் ரொக்க பணம் ரூபாய் 2000மும் வழங்கினார். நிகழ்வில் கடையம் ஒன்றியச் செயலாளர்கள் மகேஷ் மாயவன், ஜெயக்குமார், கல்லூரணி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், ரம்யா ராம்குமார், கடையம் அட்மா சேர்மன் குணசீலன், மேசியா ஜெயசிங், சங்கர், மலபார் பாக்கியராஜ், சமுத்திரக்கனி, ஜெபராஜ், தொழிலதிபர் டேவிட் செல்வராஜ், தேவதாசன், செல்வராஜ், தேவசற்குணம், கோவில் பிச்சை, கனகராஜ், சாமுவேல் ஜெயராஜ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.